
## திராவிடத்தால் வாழ்கிறோம்

925

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

23

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# திருக்குறளுக்காக ஒரு திரைப்படம்!

*1960*-ஆம் ஆண்டு கலைஞரின் திரைக்கதை வசனத்தில் டி.பிரகாஷ்ராவ் இயக்கத்தில், ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பில் வந்த திரைப்படம் 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்'.

இந்தத் திரைப்படத்தில் ஜெமினி கணேசன், டி.கே.பகவதி, சரோஜா தேவி, எம்.என். நம்பியார், எம்.என்.ராஜம், கே.ஏ.தங்கவேலு, எம்.ஆர்.சந்தானம், பி.எஸ்.வெங்கடாச்சலம், ஆர்.நாகேந்திர ராவ், டி.கே.ராமச்சந்திரன், ஏ.கருணாநிதி ஆகியோர் முக்கிய வேடங்களில் தோன்றி நடித்தனர்.

தமிழ்த் திரையில் இப்படியொரு திரைப்படம் 1960-க்கு முன்பும் பின்பும் வந்ததில்லை என்று கூறுமளவுக்கு படம் முழுவதும் திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் அப்படியொரு சிறப்பான இடத்தைக் கொடுத்து, கலைஞர் தனது திரைக்கதை வசனத்தை வடித்திருப்பார். படத்தின் கதையே ஒரு வள்ளுவர் சிலையை மையமாகக் கொண்டு இயங்கும்.

இத்திரைப்படத்தைப் போல் திருக்குறளையும் திருவள்ளுவரையும் போற்றிய ஒரு தமிழ்த் திரைப்படம் ஒட்டுமொத்த தமிழ் திரைப்பட வரலாற்றிலும் கிடையாது. பிற்காலத்தில், தனது ஆட்சிக் காலத்தில் வள்ளுவர் கோட்டத்தை கலைஞர் அமைப்பதற்கும், 133 அடி உயர வள்ளுவர் சிலையை, குமரியில் நிறுவுவதற்கும் காரணமான விதை, இப்படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதிய 1960-லேயே கலைஞரது உள்ளத்தில் விழுந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக கலைஞர், '25 ஆண்டு காலமாக எண்ணி எண்ணி நான் விடுத்த பெருமூச்சு வீண் போகாமல், விண் முட்டும் சிலை ஒன்றை விரிகடல் பரப்பின் எல்லையில் எழுப்பி இருக்கிறோம்' என 09.12.2000 -ஆம் நாள் 'முரசொலி' கடிதத்தில் எழுதியுள்ளார்.

1973-இல் கலைஞரால் வள்ளுவர் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடந்து வந்த வேளையில், தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதால் ஜனாதிபதியால் 1976-இல் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது. அதேபோல குமரி முனையில், திருவள்ளுவருக்கான 133 அடி உயர சிலை அமைப்பதற்கும் 1990-1991 நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கி, 1990 செப்டம்பர் ஆறாம் நாள் சிலை அமைக்கும் பணியை கலைஞர் தொடங்கியும் வைத்தார். இடையே ஆட்சி மாறியபோது, கிடப்பில் போடப்பட்ட வேலைகள் மீண்டும் கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடன், முடுக்கி விடப்பட்டு இறுதியாக 2000-ஆம் ஆண்டு ஜனவரி ஒன்றாம் தேதி கலைஞர் அவர்களால் குமரி முனையில் வள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் திரையில் எழுதிய திரைக்கதை வசனங்கள் பொழுது போக்குவதற்கானதல்ல, எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்காகப் போட்டு வைத்த திட்டங்கள் என்பதற்குச் சான்றாக, இந்த நிகழ்கால வரலாறு அமைந்துள்ளது.

### திரைப்படத்தின் கதை

'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' திரைப் படத்தில், வலியன்கோடு சமஸ்தானத்திற்கும் அதன் ஆளுகைக்கு உட்பட்ட வள்ளுவன் குன்றம் என்ற சமஸ்தானத்திற்கும் இடையிலான முரண்பாட்டை மையமாகக் கொண்டு கதை சொல்லப்படுகிறது.



படங்கள் உதவி : ஞானம்

சேர்ந்து பழகும் திருமேனி, அவர்களது நற்பண்பும் நல் உள்ளமும் கண்டு, அவர்களுக்குத் துரோகம் செய்ய முடியாமலும் அதேசமயம் தனது வளர்ப்புத் தந்தைக்குத் தனது செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்க வேண்டுமே என மனப்போராட்டத்திலும் தவிக்கிறான்.

இதற்கிடையே வலியன்கோடு மன்னர் (எம்.ஆர்.சந்தானம்) உடல் நலமின்மையால் ஓய்வெடுக்க, மலைநாட்டுக்கு தனது மகள் காஞ்சன மாலாவுடன் (சரோஜா தேவியுடன்) வருகிறார். அங்குள்ள காட்டில் காஞ்சனாவும் தம்பிதுரையும் எதிர்பாராமல் சந்தித்து, காதல் வயப்படுகின்றனர்.

### நாடுகளை ஒன்றுபடுத்த

அதேபோல தங்கதுரையின் தங்கை அங்கயற்கண்ணிக்கும் திருமேனிக்கும் காதல் மலர்கிறது. இதனை அறியும் தம்பிதுரை, குடும்பத்தினரிடம் கூறத் திருமேனிக்கும் அங்கயற்கண்ணிக்கும் திருமணமும் நடைபெறுகிறது. ஆனால், அதே நாளில் திருமேனி வலியன்கோடு திவானால் அனுப்பி வைக்கப் பட்ட ஒற்றன் என்பதை அனைவரும் அறிகின்றனர். வெகுண்டெழும் தங்கதுரை திருமேனியைத் தூணில் கட்டி வைக்கச் சொல்கிறான். ஆனால், திருமேனியும் அங்கயற்கண்ணியும் தப்பித்து வலியன்கோடு சென்று, திவானிடம் சமரசம் பேசி இரண்டு நாடுகளையும் ஒன்றுபடுத்த முற்படுகின்றனர்.

ஆனால், திவான் திருமேனியைக் கைது செய்து சிறையில் அடைப்பதுடன் திருமேனிக்கு மரண தண்டனையும் அறிவிக்கிறான். அங்கயற்கண்ணி வள்ளுவன்குன்றம் வந்து தனது சின்ன அண்ணன் தம்பிதுரையிடம் அழுது புலம்பித் தனது கணவனை மீட்டுத்தரக் கோருகிறாள். தம்பிதுரையும் தனது தங்கை கணவனின் உயிர்காப்பதற்காக திருவள்ளுவர் சிலையைத் தனது ஊராருக்குத் தெரியாமல் கடத்திக் கொண்டுபோய் திவானிடம் கொடுத்து, திருமேனியை விடுதலை செய்ய வேண்டுகிறான். ஆனால், அவனையும் சிறையில் அடைக்கிறான் திவான்.

வலியன்கோடு ஆதிக்கம் செலுத்துகிறது, வள்ளுவன்குன்றம் விடுதலை உணர்வுடன் எதிர்த்து நிற்கிறது. வள்ளுவன்குன்றத்தை, தமிழ்நாடாக உருவகித்து கலைஞர் திரைக்கதை வசனத்தை அமைத்துள்ளார். இப்படத்தில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் மூவரும் வெவ்வேறு பெயர் கொண்ட கதாபாத்திரங்களாக வருகின்றனர். ஆம், பெரியார் என்று கருதும்படியான தோற்றத்துடன் செல்லையா தாத்தா (பி.எஸ்.வெங்கடாச்சலம்) வருகிறார். அவரே வள்ளுவன்குன்றத்துக்கு நல்வழிகாட்டியாக உள்ளார்.

அவரது ஆசைகளை நிறைவேற்றும் செயல்வீரர்களாக அண்ணன் தங்கதுரையும் (டி.கே.பகவதி) தம்பி தம்பிதுரையாக ஜெமினி கணேசனும் வருகின்றனர். கொள்கை வீரர்களாக விளங்கும் இவ்விருவரும், திரைப்படப் பார்வையாளர்களுக்கு அண்ணாவையும் கலைஞரையும் நினைவுபடுத்துகின்றனர். பல லட்சம் பொன் மதிப்புள்ள திருவள்ளுவர் சிலையை வள்ளுவன்குன்றத்திடமிருந்து அபகரிக்க, வலியன்கோடு திவான் ஆளவந்தார் (ஆர்.நாகேந்திர ராவ்) முயற்சிக்கிறான். அதற்கு தங்கதுரையும் தம்பிதுரையும் தடையாக உள்ளனர்.

அதனால் நயவஞ்சகமாக அவர்களை அணைத்துக் கெடுப்பதற்காகத் தனது வளர்ப்பு மகன் திருமேனியை (எம்.என்.நம்பியாரை) வள்ளுவன் குன்றத்துக்கு திவான் அனுப்பி வைக்கின்றான். அங்கு சென்று தங்கதுரை குடும்பத்தினருடன்



தனது தம்பி தமது தாய்த் தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்து திருவள்ளுவர் சிலையை எதிரியிடம் ஒப்படைத்து விட்டதாக நினைக்கும் தங்கதுரை, கொதித்தெழுந்து மக்கள் படை திரட்டி, வலியன்கோட்டை நோக்கி போர்புரியச் செல்கிறான். இதற்கிடையே இளவரசி காஞ்சன மாலாவின் உதவியால் சிறையில் இருந்து தப்பும் தம்பிதுரை, திவானின் மகன் வீரமணியை ஏமாற்றி, வள்ளுவர் சிலையை மீட்டுக்கொண்டு தனது நாடு திரும்புகிறான். வழியில் படையுடன் வரும் தனது அண்ணனிடம் சிலையை ஒப்படைக்கிறான்.

தனது தம்பி குற்றமற்றவன் என்பதை உணரும் தங்கதுரை, தனது தம்பியை ஆரத்தழுவுகிறான். இருவரும் சேர்ந்து படை நடத்திச் சென்று திவானையும் அவன் மகன் வீரமணியையும் வீழ்த்தி, திருமேனியையும், திவானால் சிறை வைக்கப்பட்ட மன்னரையும் இளவரசியையும் மீட்கின்றனர்.

இறுதியில், வள்ளுவன்குன்றம் சுதந்திர நாடாகிறது. திவானின் சர்வாதிகாரத்திலிருந்து வலியன்கோடும் விடுதலை அடைகிறது. தம்பிதுரைக்கும் காஞ்சன மாலாவுக்கும் திருமணம் நடைபெறுகிறது. 'திருக்குறள் வாழ்க, திருவள்ளுவர் வாழ்க' என்று மக்கள் முழங்குவதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே படத்தின் கதை.

> **'திருக்குறள் வாழ்க, திருவள்ளுவர் வாழ்க' என்று மக்கள் முழங்குவதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே படத்தின் கதை.**

...காட்சி விரியும்

## மக்கள் பதிப்பாக 'நெஞ்சுக்கு நீதி'!



முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகள் பலதரப்பட்ட மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், கடந்த ஆண்டு டிசம்பரில் தமிழ்நாடு அரசு அவருடைய நூல்களை நாட்டுடைமை ஆக்கியது. அதன் விளைவாக, கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி', 'ரோமாபுரிப் பாண்டியன்', 'கலைஞரின் கவிதைகள்', 'குறளோவியம்' என எண்ணற்ற நூல்களைப் பல்வேறு பதிப்பகங்கள் வெளியிட்டு வருகின்றன.

இதன் ஒருபகுதியாக, ஆறு பாகங்களைக் கொண்ட கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' நூலை, மக்கள் பதிப்பாகக் கொண்டு வருகிறது நன்செய் பதிப்பகம். இதுதொடர்பாக, அந்தப் பதிப்பகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "கலைஞரின் அரசியல் பயணம் மட்டும் அல்லாது, தமிழ்நாடு மற்றும் இந்திய ஒன்றியத்தின் நெருக்கடி கால நிலை உள்ளிட்ட ஐம்பதாண்டு கால வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய அரசியல் நிகழ்வுகளைக் கொண்ட பதிவு அந்நூல். எங்கோ ஒரு கடைக்கோடி கிராமத்தில் சமூகத்தின் விளிம்பு நிலையில் பிறந்து, தனது உழைப்பால் ஐந்து முறை முதல்வராகி, ஒரு மாநிலத்தை நவீனத்துவமாகக் கட்டமைத்தவரின் வாழ்வில், எத்தனை எத்தனை அசாத்தியமான சுவாரசியமான நிகழ்வுகள்.

சுயமுன்னேற்ற நூல்களை விரும்பிப் படிப்போரும்கூட படிக்க வேண்டிய தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்ற நூல், திராவிட இயக்கத் தோழர்களின் கைகளில் இருக்கவேண்டிய 3,800 பக்கங்கள் கொண்ட இந்த வரலாற்றுப் பெட்டகத்தை நன்செய் பதிப்பகம் மக்கள் பதிப்பாக 1,500 ரூபாய்க்கு வெளியிடுகிறது. கொரியர் செலவு ரூ.200. முதல் 1,000 படிகள் மட்டுமே இந்த விலைக்குக் கிடைக்கும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

நூலை முன்பதிவு செய்ய விரும்புபவர்கள், SEERBOOKS.IN இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் மேடையில் சிறுவர்களாக
### நானும் என் தம்பிகளும்...



எஸ்.ராஜேஸ்

09-08-1994 அன்று தாம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இன்றைய முதலமைச்சர் – அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். நிகழ்ச்சியில், தாம்பரம் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த என் மாமா இரா.கந்தசாமி அவர்கள் என்னையும் என் தம்பிகளையும் மேடை ஏற்றி, தளபதி அவர்களிடம் அறிமுகப்படுத்தினார். உடன் அன்றைய காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்– இன்றைய காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர், அண்ணன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், அன்றைய தாம்பரம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் – இன்றைய தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. உள்ளனர். படத்தில் என் தம்பி தாம்பரம் மேற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சுரேஷ் , முத்தமிழறிஞரால் பெயர் சூட்டப்பட்ட இளைய தம்பி உதயசூரியன் ஆகியோரும் உள்ளனர்.

**– எஸ்.ராஜேஸ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், தாம்பரம், சென்னை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

**நினைவுக்கு**

## மேயர் - துணைமேயர்!

சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயராக சி.சிட்டிபாபு அவர்களும், துணை மேயராக முஸ்லிம் லீக் உறுப்பினர் டாக்டர் அபிபுல்லா பெய்க் அவர்களும் 28-11-64 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131